**பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட் - 2016**

---

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக்கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கம்பனியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2016 யூன் இலிருந்து ஒழுக்காற்று காரணமாக கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்த அலுவலகரொருவருக்கு மொத்தச் சம்பளமாக மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 323,547 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சிடமிருந்து திரும்பப்பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கம்பனியின் நிர்வாகம் 2015 செப்தெம்பர் 25 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக கணக்காய்வு திகதியான 2017 யூன் 01 வரையிலும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருக்காமையினால் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்துவ சாத்தியமற்றதொன்றாகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் பங்கிலாபத்தை பிரகடனப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் பின்தங்கிய நிலையிலிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 9,297,372 தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 49,787,271 மில்லியன் தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 40,489,899 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனை வருமானம் ரூபா 38,351,803 ஆல் அதிகரித்தமை மற்றும் நிலையான சொத்துக்களிற்கான வட்டி வருமானம் ரூபா 7,117,953 ஆல் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளின் இவ் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தன.

## 4. செயலாற்றல் மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

அரச புலமைப்பரிசிலுடன் நாட்டின் இராசாயனங்கள் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளிற்கு தலைவராக இருப்பதுடன் அதனுடைய தூரநோக்குகளுக்கு முன்னுரிமையை கொடுப்பதோடு செயற்பாட்டிலுள்ள கம்பனியானது 1950 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் 225 ஏக்கர், காணிப்பரப்பில் அரச கைத்தொழிற்சாலையாக ஸ்தாபிக்கப்பட்டதுடன் தொடர்ந்து இது 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. தொழிற்சாலையானது, உள்நாட்டு உப்பை மூலப்பொருளாக பயன்படுத்தி திரவ குளோரின்,

காஸ்ரிக் சோடா மற்றும் கைற்ரோகுளோரிக் போன்றவற்றை பிரதான உற்பத்திப் பொருளாகவும் சிங் குளோரைட், பெரிக் குளோரைட் மற்றும் மேசை உப்பு போன்ற உபபொருட்களையும் சந்தைக்கு விநியோகித்திருந்தது. எனினும், 1985 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கையினால் செல்வாக்கால் பரந்தன் இரசாயனங்கள் தொழிற்சாலையின் உற்பத்தியானது இடைநிறுத்தப்பட்டதுடன் உள்நாட்டு கைத்தொழிற்சாலைகளுக்கு தேவையான இராசாயனங்கள் தற்போது இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

கம்பனியின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரவ குளோரினை இறக்குமதி செய்யவும் அதேநேரம் திரவ கலோரினை உள்நாட்டு முகவரினூடாக இறக்குமதி செய்வதற்குமான அனுமதிப்பத்திரத்தை கொண்டுள்ள ஒரே ஒரு உள்நாட்டு கம்பனி வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனங்கள் கம்பனியாவதுடன் 2016 ஆம் ஆண்டில் தரகாக ரூபா 10,258,247 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செலவினமானது தேசிய நீர் வழங்கல் செலவினத்தில் நேரடியாக விளைவை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) திரவ குளோரினானது பல ஆண்டுகளுக்கு மேலாக அதே வழங்குனர் குழுவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதுடன் திரவ குளோரின்களிற்கான விலைமனுக்கள் வழங்குனர்களின் அடிக்கடியான விலை மாற்றங்களுடனும் உள்நாட்டு இறக்குமதி தரகுகளுடனும் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. விஷேடமாக குளோரினிற்காக சர்வதேச விலை குறைந்தமையால், கம்பனியானது வழங்குனர்களால் கோரிய எந்த விலைக்கும் ஏற்க வேண்டியிருந்தது.

(இ) வெளிநாடுகளுக்குரிய வெளிநாட்டு நாணயமாற்றின் பாரிய தொகையின் வெளிப்பாய்ச்சலை தடுக்கும் நோக்கத்திற்காக, பரந்தன் கைத்தொழிற்சாலையை நிர்மாணித்தல் மீதும் உற்பத்தியை வழமை போல் மேற்கொள்வதற்காகவும் கம்பனியின் கவனமானது செலுத்த வேண்டும். கம்பனியன் மிகை வளங்களை கொண்ட காணி இருந்த போதிலும், நீண்ட காலத்திற்கு மேலதிகமாக இரசாயனங்களை இறக்குமதி செய்தமையால் எதிர்கொள்ளக்கூடிய சாதகமான எதிர்கால இடர் தொடர்பாக கம்பனியானது கவனம் செலுத்த வேண்டும்.

(ஈ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தலைமை அலுவலகத்திற்கான புதுப்பித்தல், Mini Bleaching Powder செயற்திட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் சோடா சாம்பலின் 25 மெற்றிக் தொன்களை இறக்குமதி செய்து வழங்கல் போன்ற நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்டக்கப்பட்டிருந்த அதேநேரம், அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரச பெறுகை வழிகாட்டல்களின் 3.1.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், உள்நாட்டு வழங்குனர்களின் இயலுமை மட்டுப்படுத்தும் போது சர்வதேச போட்டி விலைமனுக்கள் 3.1.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கோரப்பட வேண்டியதுடன், உயர்ந்த பட்ச போட்டியை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட ஊடகங்களில் பெறுகை அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 71,154,664 பெறுமதியான குளோரினை உள்ளடக்கிய இரசயானங்கள் இறக்குமதியின் முறைமையிலிருந்து வேறுபடுகின்ற போதிலும், தேசிய விலையிடல் முறைமையை பின்பற்றுவதனால் வெளிநாட்டு கம்பனிகளிற்கு பதிலாக உள்நாட்டு முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டது.

(ஆ) ஒத்த தன்மையான நபர்கள் உரிமையாண்மையை கொண்டிருப்பதுடன் இரண்டு கம்பனிகளின் இயக்குனர்களின் இயலுமையானது மேற்கூறப்பட்ட சில பெறுகைகளுடன் தொடர்புடைய வழங்குனர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்துடன் மேற்குறிப்பிடப்பட்ட குழுவிலிருந்த மூவர் வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனங்கள் கம்பனியின் சேவையிலிருந்து விலகியவர்கள் ஆவர். 2016 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் அத்தகைய முகவர்களிற்காக ரூபா 3,080,700 தொகையான தரகு செலுத்தப்பட்டிருந்தது. அத்தகைய சூழ்நிலைகளின் கீழ், கணக்காய்வில் பெறுகை செய்முறையின் வெளிப்படுத்தல் தொடர்பில் திருப்தியடைய முடிந்திருக்கவில்லை. மேலும், தொடர்புபட்ட தரப்பினர் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தேவையான வெளிப்படுத்தல்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 24 ஆல் வேண்டப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரந்தனில் அமைந்துள்ள கம்பனியின் காணியை சுற்றி நிறுவுவதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,217,000 செலவழிப்பதன் மூலம் 1000 இணைப்பு வரிசை தூண்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 68 இணைப்பு வரிசை தூண்கள் மாத்திரம் 2017 செப்தெம்பர் அளவில் நிறுவப்பட்டதுடன் மிகுதியாகவுள்ள 932 வரிசை தூண்கள் காணியில் குவிக்கப்பப்பட்டிருந்தது.

(ஆ) களுத்துறையிலுள்ள நாகொட பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்ட வெளிக்கும் தூள் உற்பத்தி செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டிலிருந்து ரூபா 40 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதும், 2017 செப்தெம்பர் அளவிலும் இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 முகாமைத்துவ நடவடிக்கைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடிநீரை சுத்தப்படுத்துவதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு தேவையான குளோரினை தொடர்ச்சியாக வழங்கல் கம்பனியின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும், அந்த செயன்முறையை அமுல்படுத்துவதற்கு தேவையான இருப்பு மட்டத்தை பராமரிப்பதற்கான பொறுப்பு முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என பின்வரும் விடயங்களிற்கு இணங்க அவதானிக்கப்பட்டது.

(i) 80 மெற்றிக் தொன்கள் குளோரின் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாதாந்தம் விற்கப்பட்டதுடன் அத்தகைய தேவைப்பாடுகளை உள்ளடக்கி மாதாந்த தேவைப்பாடானது 165 மெற்றிக் தொன்கள் ஆகக்குறைந்த இருப்பு மட்டமாக மற்றும் 175 மெற்றிக் தொன்கள் மொத்த விற்பனையாகவும் கணிக்கப்பட்டது. இருந்த போதிலும், மேற்கூறப்பட்ட இருப்பு மட்டங்கள் 2016 சனவரியிலிருந்து 2017 பெப்ரவரி வரையான காலப்பகுதியின் போது எதிர்பார்க்கப்பட்டவாறு பராமரிக்கப்பட்டிருக்காததுடன் இருப்பு மட்டமானது 2017 பெப்ரவரி அளவில் பூச்சிய மட்டத்திலிருந்தது.

(ii) திரவ குளோரின் இருப்பு கட்டுப்பாடு, மறுகட்டளை மட்டம் (Re-Order Level) மற்றும் சிக்கன கட்டளை கணியம் (Economic Order Quantity) தொடர்பில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குளோரின் இறக்குமதிக்கான சுற்றுச் செய்முறை, ஹொரனை அலகு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குனர்களுக்கு அவற்றை வழங்கல் போன்றவற்றிற்காக கம்பனியானது 900 கிராம்களின் 715 சிலிண்டர்களை மாத்திரம் வைத்திருந்ததுடன் மேலும், ஒவ்வொரு மாதத்திலும் வழங்குனர்களுடன் 300 சிலிண்டர்களின் எண்ணிக்கையான முக்கியமாகவிருந்தது. அதற்கிணங்க, கம்பனிக்கு சொந்தமான சிலிண்டர்கள் தேவையான குளோரின் இருப்பு மட்டத்தை பேணுவதற்கு போதுமையற்றதாகவிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**4.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

2016 பெப்ரவரி 16 ஆந் திகதிய PCCL/09/$Cl_2$/2015/03 ஆம் இலக்க பெறுகையுடன் தொடர்புடைய திரவ குளோரின் 756 மெற்றிக் தொன்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட சிலிண்டர்கள் அனுமதிப்பத்திரத்தால் குறிப்பிடாமல் துறைமுகத்திற்கு இறக்கப்பட்டதுடன், 28 சிலிண்டர்கள் 2017 செப்தெம்பர் வரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட சொத்துக்கள் விடுவிக்காமல் விட்டால் கம்பனியானது 6,305,800 நட்டத்தை தாங்கிக்கொள்ள நேரிடும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்**

கம்பனியின் தலைமை அலுவலகம், அலுவலக கட்டிடம் மற்றும் இரண்டு சிறிய கட்டிடங்களை உள்ளடக்கிய செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஸ்தாபிப்பு ரூபா 25,000,000 தொகையை செலுத்துவதன் மூலம், 2009 ஆம் ஆண்டில் களுத்துறையில் நிர்மாணிக்கப்பட்டது. இருந்த போதிலும், இரண்டு சிறிய கட்டிடங்கள் அறிக்கை திகதியளவில் 2017 ஆம் ஆண்டில் கஸ்ரிக் சோடாவின் உற்பத்தி மற்றும் களஞ்சியத்திற்காக பயன்படுத்தப்பட்டதுடன் இரண்டு அடுக்கமாடி அலுவலக கட்டிடங்களிலுள்ள 4 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்கிணங்க, அத்தகைய கட்டிடங்கள் 7 வருடங்களுக்கு மேலாக குறைவாக பயன்படுத்தப்பட்டது.

**4.7 பதவியணியினர் முகாமைத்துவம்**

தாபன விதிக்கோவைகளின் அத்தியாயம் V இன் 2:5:1 ஆம் பிரிவிற்கிணங்க, அலுவலர்களை தற்காலிகமாக விடுவித்தலானது 02 வருடங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டிய அதே நேரம் கம்பனியின் பிரதம பொது முகாமையாளர் 2002 ஆம் ஆண்டிலிருந்து அறிக்கை திகதி வரை ஐந்து சந்தர்ப்பங்களில் வேறொரு அரச நிறுவனத்திற்கு நேரத்திற்கு நேரம் விடுவிக்கப்பட்டிருந்தார்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

கம்பனியானது செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருந்த போதிலும், 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியால் வேண்டப்பட்டவாறு பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 53,300 மில்லியன் தொகையான மூலதனக் கொள்வனவுகள் மற்றும் செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்**

2015 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவால் வேண்டப்பட்டவாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

கம்பனியில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி இருந்த அதேநேரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் 2016 ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தனியார் கணக்காய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தகுதிவாய்ந்த அதிகாரசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்பு தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | இணங்காமை |
|---|---|
| (அ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) கம்பனியின் விற்பனையுடன் தொடர்புடைய காசோலைகளை பெறுவது மற்றும் கொள்வனவு செய்வோருக்கு கொடுக்கப்பட்ட கடன் அந்தக் காலப்பகுதி 30 நாட்களாகவிருந்தது. இருந்தபோதிலும், காலப்பகுதி 30 நாட்களிலிருந்து 210 நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) நீண்டகால நேரத்திற்கு மேலதிகமாக வருமதியாகவுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கு தவறியமை. |
| (ஆ) பதிவேடுகளை பராமரித்தல் | காசோலை பதிவேடு மற்றும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டை பராமரிப்பதற்கு தவறியமை |
| (இ) நிதிக்கட்டுப்பாடு | (i) அலுவலர்களால் பெறப்பட்ட முற்பணங்கள் மற்றும் சில்லறைக்காசை தீர்ப்பதில் நீண்டகால தாமதம் நிலவியமை |
| | (ii) பல உத்தியோகத்தர்களினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படுகின்றமை. |